


10. 02. 2026

தலைப்புச் செய்திகள்

- எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை பிற்பகல் இரண்டு மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டது.
- நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் இதுவரை 272 ஜிகா வாட்டாக அதிகரித்துள்ளது என்று மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி மாநிலங்களைவில் தெரிவித்துள்ளார்.
- தமிழக அரசு கல்விக்கு உயர் முன்னுரிமையுடன் திட்டங்களை நிறைவேற்றி வருவதாக முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் கூறியுள்ளார்.
- பறவை காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கோழி இறைச்சியை நன்கு சமைத்து உட்கொள்ள மாநில அமைச்சர் திரு. மா. சுப்ரமணியன் அறிவுறுத்தியுள்ளார்.
- தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் இன்று நிறைவடைகின்றன.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖

மக்களவை

எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவை இன்று கூடியதும், அவை நடத்தும் அலுவலர் திரு. பி.சி. மோகன் கேள்வி நேரத்தை எடுத்துக்கொள்ள முற்படுகையில் காங்கிரஸ், திரிணமுல் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்கட்சிகள், அவையின் மையப்பகுதியில் குழுமி கோஷங்களை எழுப்பின.

அவை சுமூகமாக நடைபெறவும், கேள்வி நேரத்தை தொடரவும், எதிர்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு எதிர்கட்சியினர் செவிமடுக்காமல் தொடர்ந்து முழக்கமிட்டவாறு காணப்பட்டனர்.

இந்த அமளியினூடே, மத்திய கால்நடை, பால்வளத்துறை இணையமைச்சர் திரு. எஸ். பி. சிங் பாஹேல், துறைசார்ந்த கட்டமைப்பு மேம்பாட்டு நிதி தொடர்பாக பதிலளிக்க முற்பட்டபோது கூச்சல் குழப்பங்களால் அவரால் பதிலளிக்க இயலவில்லை.

இதனையடுத்து அவை முதலில் நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியபோது பல்வேறு அமைச்சர்கள் துறைசார்ந்த செயலாக்கங்களை சமர்ப்பித்தனர்.

அதனைத் தொடர்ந்து 2026-27-ம் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தை அவை நடத்தும் அலுவலர் எடுக்க முற்பட்டபோது எதிர்கட்சியினர் குரலெழுப்பினார்கள்.

அப்போது குறுக்கிட்ட அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு நாடாளுமன்றத்தின் மதிப்புமிகு நேரம் எதிர்கட்சிகளின் செயல்களால் வீணாவதாகவும், அவை நடவடிக்கைகளை தொடர ஒத்துழைக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

ஆனால் எதிர்கட்சிகள் தொடர்ந்து அமளயியில் ஈடுபட்டதால் மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

கிரண் ரிஜிஜு

மக்களவை நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து குந்தகம் விளைவிப்பதால் அவை மாண்பிற்கு உரிய மரியாதையை வழங்காத எதிர்கட்சிகளின் மனப்பாங்கு வெளிப்படுவதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பெண் உறுப்பினர்கள் ஆளுங்கட்சியினரை தாண்டி, பிரதமரின் இருக்கை அருகே நெருங்க முற்பட்டது முறையற்ற செயல் என்று குறிப்பிட்டார்.

காங்கரஸ் உறுப்பினர்களின் நடத்தை குறித்து பி.ஜே.பி.யை சேர்ந்த பெண் உறுப்பினர்கள் மக்களவை தலைவரிடம் கடும் புகாரை அளித்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

எதிர்கட்சி உறுப்பினர்களின் நடத்தை நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு விரோதமானது என்று திரு. கிரண் ரிஜிஜு குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

சிராக் பாஸ்வான்

ஒரே ஒரு பிரச்சனையில் எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி பட்ஜெட் கூட்டத்தொடரை வீணடிப்பதாக மத்திய அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், குடியரசு தலைவர் உரை மற்றும் பட்ஜெட் மீதான

விவாதத்தின் மீது எதிர்கட்சியினர் உட்பட பிராந்திய கட்சி தலைவர்கள் பேச முடியாத நிலை இதனால் ஏற்பட்டுள்ளதாக குறைகூறினார்.

மக்களயையில் பேச தங்களுக்கு வாய்ப்பளிக்கப் படவில்லை என்று எதிர்கட்சியினர் கூறுவது தவறானது என்றும் கூறிய திரு. பாஸ்வான், அவர்களுக்கு தொடர்ந்து வாய்ப்பளிக்கப்பட்டதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

சர்பானந்த சோனோவால்

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் சிறப்பான கொள்கைகளால் தேசிய நீர்வழிகளில் 146 மில்லின் டன் சரக்கு கையாளப்பட்டு சாதனை படைக்கப் பட்டுள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், உள்நாட்டு நீர்வழிகளில் கடந்த 10 ஆண்டில், மொத்த முதலீடு ஆயிரத்து 700 கோடி ரூபாய் என்றும், ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் காலத்தில் இது வெறும் 183 கோடி ரூபாயாக இருந்ததாகவும் சுட்டிக்காட்டினார்

தற்போது 111 நீர்வழிகள் செயல்பாட்டில் உள்ளதாகவும், இதனால் தளவாட போக்குவரத்திற்கான செலவு குறைந்துள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

கப்பல் சுற்றுலா 480 சதவிகிதம் அதிகரித்து உள்ளதாகவும், பயணியர் போக்குவரத்து எண்ணிக்கை 5 லட்சமாக உயர்ந்துள்ளதாகவும் கூறினார்.

கலங்கரை விளக்க சுற்றுலாவும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்திருப்பதாக திரு. சோனாவால் எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பிரல்ஹாத் ஜோஷி

நாட்டின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறன் இதுவரை 272 ஜிகா வாட்டாக அதிகரித்துள்ளது என்று மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர், சூரிய மின்சக்தி திறன் 136 ஜிகா வாட்டாக உயர்ந்துள்ளது என்றார்.

உலகளவில் தற்போது இந்தியா 3-வது பெரிய எரிசக்தி உற்பத்தி நாடாக உருவெடுத்துள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

பிரதமரின் வேளாண் சூரிய சக்தி மின் திட்டம், ஊரக பகுதிகளில் பெரும் வரவேற்பை பெற்றுள்ள நிலையில் அதனை தத்தம் பகுதிகளுக்கும் விரிவுப்படுத்த மாநிலங்கள் கோரிக்கை வைத்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

உலகளாவிய பசுமை ஹைட்ரஜன் நாடாக இந்தியா வளர்ந்து வருவதாகவும், 8 ஆயிரத்து 300 டன் திறனுடன் பசுமை ஹைட்டரஜன் திட்டங்கள் நாட்டில் தொடங்கப்பட்டுள்ளதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கம்லேஷ் பாஸ்வான்

வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார இயக்க சட்டம் கிராமப்புற மேம்பாட்டை நோக்கமாக கொண்டு வடிவமைக்கப்பட்டது என்று மத்திய ஊரக மேம்பாட்டு இணையமைச்சர் திரு. கமலேஷ் பாஸ்வான் மக்களவையில் கேள்வி நேரத்தின் போது எழுத்து பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்தார்.

பயனாளிக்கு வேலைவாய்ப்பு வழங்காத பட்சத்தில் உரிய ஊதியம் வழங்க இதில் கட்டாயமாக்கப் பட்டிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வேலை வாய்ப்பிற்கும், வாழ்வாதார மேம்பாட்டிற்கும் இந்த சட்டம் வகை செய்வதாகவும் அமைச்சர் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ராம்நாத் தாகூர்

பிரதமரின் வேளாண் நிதியுதவி திட்டத்தின் கீழ் 21 தவணைகளாக 4 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் இதுவரை வழங்கப்பட்டுள்ளது என்று வேளாண் இணையமைச்சர் திரு.ராம்நாத் தாகூர் மக்களவையில் கேள்வி நேரத்தில் எழுத்துபூர்வமான பதிலில் தெரிவித்துள்ளர்.

விவசாயிகளின் நலனை நோக்கமாக கொண்டுள்ள இந்த மின்னணு கட்டமைப்பு திட்டத்தால் நாட்டிலுள்ள அனைத்து விவசாயிகளும் இடைத்தரகர்கள் இல்லாமல் பயனடைவதாக திரு. தாகூர் கூறினார்.

நேரடி பணபரிவர்த்தனை மூலம் இந்த திட்டம் விவசாயிகளின் வங்கி கணக்குகளில் செலுத்தப்படுவதாக எடுத்துரைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

நாட்டிலேயே 2-வது மிகப்பெரிய பொருளாதார வளர்ச்சிக் கொண்ட மாநிலம் தமிழ்நாடு என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், கல்விக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்து திட்டங்களை நிறைவேற்றி வருவதாக கூறினார்.

புதுமைப்பெண் தமிழ்ப்புதல்வன் திட்டங்களால் உயர்கல்வி மாணாக்கர் சேர்க்கை அதிகரித்துள்ளதாக கூறியஅவர், உயர்கல்வி படிக்கும் மாணவிகளின் எண்ணிக்கை 34 சதவிகிதம் உயர்ந்துள்ளதாக குறிப்பிட்டார்.

தொடர்ந்து சென்னை, கொளத்தூரில் பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில் 11 கோடியே 37 லட்ச ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த காவல் அலுவலகக் கட்டடத்தை முதலமைச்சர் இன்று திறந்து வைத்தார்

மாநகராட்சி சார்பில் மூன்றரை கோடி மதிப்பீட்டில் புதிய பூங்கா அமைக்கும் பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

மா.சுப்ரமணியன்

பறவைக்காய்ச்சல் குறித்த அறிக்கையை மத்திய அரசு, அனைத்து மாநில அரசுகளுக்கும், அனுப்பி வைத்துள்ளதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொதுமக்கள் கோழி இறைச்சியை நன்கு சமைத்த பின்னரே உட்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

... வாய்ஸ் ..

ஓமாந்தூரார் அரசு மருத்துவமனையில் 8 கோடி ரூபாய் மதிப்பிலானா இருதய வடிகுழாய் ஆய்வகத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைச்சர் திறந்து வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

ராஜேந்திரன்

உலகளாவிய பாரம்பரியம் கலாச்சாரம் பண்பாடுகள் போன்ற வரலாற்று சிறப்புகளின் தாயகமாக தமிழ்நாடு திகழ்கிறது என்று, மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் ஆன்மீகம், சுற்றுச்சூழல், மருத்துவ சுற்றுலா, போன்றவற்றிற்கு உகந்த மாநிலமாக தமிழகம் உள்ளது என்று கூறினார்.

தொல்லியல் துறையால் அங்கீகரிக்கப்பட்ட மாமல்லபுரம் கடற்கரை கோவில் ரதங்கள், தஞ்சை பெரிய கோயில் கங்கை கொண்ட சோழபுரம், நீலகிரி மலை ரயில் ஆகியவற்றை யுனெஸ்கோ, உலக பாரம்பரிய நினைவுச் சின்னங்களாக அறிவித்துள்ளது, மாநிலத்திற்கு பெருமை சேர்ப்பதாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் உதவி சுற்றுலா அலுவலர் பணிகளுக்கு தேர்வு செய்யப்பட்ட 9 பேருக்கு பணிநியமன ஆணைகளை அமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கீதாஜீவன்

இயற்கையின் கொடையான நீர் நிலம் காற்று பூமி பாதுகாப்பது எதிர்கால சந்ததியினரின் கடமை என்று மாநில

சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துகுடியில் வன உயிரினங்கள் பாதுகாப்பு குறித்த பயிற்சி நிறைவு நிகழ்ச்சியில் இதனை தெரிவித்த அவர் மாநிலம் முழுவதும் 20 ஆயிரம் மாணாக்கருக்கு இத்தகைய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

இம்மாவட்டத்தில் 25 பள்ளி மாணாக்கருக்கு சான்றிதழ்களை அமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

வாக்காளர் பட்டியல்

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் இன்றுநிறைவடைகின்றன.

கடந்த நவம்பர் மாதம் 4-ம் தேதி தொடங்கிய இப்பணிகளை தொடர்ந்து டிசம்பர் மாதம் 19-ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

வரைவு வாக்காளர் பட்டியலில் திருத்தம், புதிதாக பெயர் சேர்த்தல் உள்ளிட்டவற்றிற்கு கடந்த டிசம்பர் 19-ம் தேதி முதல் இருமுறை கால அவகாசம் அளிக்கப்பட்ட நிலையில், மாநிலம் முழுவதும் இதுவரை 34 லட்சத்து 75 ஆயிரம் பேர் இதற்காக விண்ணப்பம் செய்துள்ளனர்.

வரும் 17-ம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படவுள்ளது.

இதனிடையே தலைமை தேர்தல் ஆணையர் தலைமையிலான சிறப்பு குழு அடுத்தவாரம் தமிழகத்திற்கு வருகிறது.

தேர்தல் தேதி குறித்து அனைத்து கட்சிகள் மற்றும் மாநில அதிகாரிகளுடன் ஆலோசனைகளை இக்குழு மேற்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖❖

திருப்பூர் வாய்ஸ்

இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்ததால் ஏற்றுமதி அதிகரிக்கும் என்று திருப்பூர் ஏற்றுமதி நிர்வாக குழு உறுப்பினர் திரு. ராமு தெரிவித்துள்ளார்.

..வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

புத்தகத்திருவிழா

நெல்லை பொருநை புத்தகத்திருவிழா இன்று தொடங்கி 12 நாட்கள் நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

தில்லியில் நடைபெறும் ICC உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியில் நமீபியாவிற்கு எதிராக 157 ரன் என்ற வெற்றி இலகுடன்

விளையாடும் நெதர்லாந்து சற்றுமுன் 16 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 129 ரன் எடுத்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖